RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22237

OPEN ACCESS

# சங்க இலக்கியம் காட்டும் ஊனமுற்றோர் வாழ்வு

சு. காளீஸ்வரி [அ, *], ச. மல்லிகா [அ]

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், இணைவுப் பெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# Life of Disabled People in Sangam Literature

S. Kaleeshwari [a, *], S. Mallika [a]

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: kaleeshbharathi@gmail.com

Received: 09-09-2022
Revised: 24-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Sangha literature is a very old literature both in terms of time and concept. The Sangam literature proclaims the high culture of ancient Tamil people. Society is an organization in which many people live together. Community is a subdivision of society, individual interest is safe guarded in a community living together as an ethnic group. A society is an environment where a man can live harmoniously both alone and in contact with other people. Both abled and disabled people live in this society. Disability happens both naturally and artificially. There are songs in literature that give confidence to disabled people that even if there are shortcomings, you can overcome the shortcomings and make progress in life. This article explores the value, lifestyle, and problems faced by disabled person during Sangam era.

**Keywords:** Sangam Literature, Disabled People, Society, Tamil People

## முன்னுரை

சமூகம் என்பது குழுவாகவும், கூட்டமாகவும், வாழும் மக்கட் தொகுதி. மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், குறைகளைப் போக்கிக் கொள்ளவும், இனப்பெருக்கத்திற்காகவும் கூடி வாழ்கின்றனர். கல்வியில் உள்ளடங்கும் ஒரு துறையாக சமூகவியல் துறை காணப்படுகிறது. சமூகவியல் துறையில் ஒன்று சமூக நோயியல் என்பதாகும். சமூகத்தின் இயல்பான செயற்பாட்டையும், வளர்ச்சியையும் பாதிக்கின்ற கூறுகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு நோய் நிலையாக “ஊனம்” அமைகிறது. உடல், உள ஊனத்தால் பாதிப்புற்றச் சமுதாய உறுப்பினரின் நிலைமையும், வாழ்வியல் படிநிலையையும், பல சிக்கல்களை உள்ளடக்கியதாகும். சமூக நலத்தைப் பாதிக்கின்ற எந்தச் சமூகச் சிக்கலும் சமூக நோயாக அமைகிறது.

## அமைதியான சமூகம்

சமூகத்தில் அன்றும், இன்றும் ஊனமுற்றோரின் வாழ்க்கை பல சிக்கல்களையும், இன்னல்களையும் உள்ளடக்கியதாகவே அமைகிறது. இலக்கியங்கள் அவர்களின் மன வலியைப் பிரதிபலிக்கின்றன. ஒரு அமைதியான சமூகத்தின் தன்மையை அன்னி தாமசு அவர்கள், “குழு, குழுமம் கூட்டம், மக்கட்தொகுதி என பல சிறு சிறு பகுப்புகளும், பிரிவுகளுமாகச் சேர்ந்து சமூகம் எனும் பெரும் தொகுப்பு அமைகின்றது. இவற்றிடையே இணக்கமும், நல்லுறவும், கூடிவாழும் மனப்பான்மையும்,

ஒப்புரவும் காணப்படுவது அமைதியான சமூகத்தை ஏற்படுத்தும்." சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் என்ற நூலில் விளக்கியுள்ளார் (Anne Thomas, 2004).

சமூகவியல் என்பது மொழி அல்லது இன வழிபட்ட சமுதாய உறுப்பினர்களின் வாழ்க்கை முறையினை ஆராயும் நிலையாகும். சமூகத்தைப் பற்றி அறியும் அறிவியல் சமூக அறிவியல் எனப்படும். தனி மனிதனையும், மனித சமுதாயத்தையும் ஆராய்வதே சமூகவியலின் முக்கிய நோக்கம்.

## சமூகத்தில் ஊனம்

சமூகத்தில் தனி மனிதச் சிதைவுகளில் முக்கியமாகக் கருதப்படுவது உள நோய் மற்றும் உடல் நோயான ஊன நிலையாகும். உள, உடல் ஊனமானது ஒரு மனிதனின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கிறது. இந்த தனிமனித பாதிப்பானது குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சமூகத்தின் பாதிப்பின் தன்மையை தனிமனித ஊனம், சமூக நோக்கில் ஊனம் என இரண்டாகப் பகுப்பர். தனிமனித ஊனம் என்பது ஒரு மனிதனுக்கு ஏற்படும் உடல், உள குறைபாடாகும். சமூக உறுப்பினராக, பொருளாதார நிலையில் வாழும் தகுதியற்றோர் சமூகவியல் நோக்கில் ஊனமுற்றோர் ஆகின்றனர். ஐம்பொறிகளில் குறைபாடு, நோயின் காரணமாகவும், முதுமையின் காரணமாகவும் ஊனம் (குறைபாடு) ஏற்படும்.

## மனிதப் பிறவியின் அருமை

புல்லாவும்,சிறு செடிகளாகவும், புழுவாகவும், மரமாகவும், பல வகை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பாம்பாகவும், கல்லில் வாழும் உயிராகவும் பிறந்த பின்னரே மனிதராகப் பிறந்ததாக மாணிக்கவாசகர் பாடுகின்றார். அரியதாகக் கிடைக்கக்கூடியது மனிதப்பிறவி, இதனை ஔவையார்,

"அரிது கேட்கின் வரிவடி வேலோய்

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது

மானிடர் ஆயினும் கூன் குருடு, செவிடு

பேடு நீங்கிப் பிறத்தல் அரிது" (Puliyur Kesigan, 2010) என்ற பாடலில் மனிதராகப் பிறப்பது கிடைத்தர்கரிய பேறு எனவும் அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி பிறத்தல் அரிய செயல் எனவும் பாடுகின்றார். உலகில் தோன்றிய பல்லாயிரக்கணக்கான உயிரினங்களில் மக்களை உயர் திணையாகப் பாடுகின்றார் தொல்காப்பியர்.

"உயர்திணை என் மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே"

என்கிறார் (Thirunanasambantham, 2013).

## உள்ளுறுப் பொருளாக ஊனம்

தொல்காப்பியர் சொற்களைப் பிரித்து, வகுத்து, தொகுத்து, பகுத்து பல விதிகளைக் கூறியுள்ளார். சொல்லதிகாரச் சொற்றொடர்களில் உள்ளுறுப் பொருளாக ஊனத்தின் (குறை) விளக்கியுள்ளார்.

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்

ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி" (Thirunanasambantham, 2013).

ஆண்மை தன்மைக் குறைந்து பெண்மைத் தன்மை அதிகரித்து ஆண்மை திரிந்த (பெண்மையைச் சுட்டும்) பெயர்ச்சொல்.

ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கு உரையாசிரியர் தரும் விளக்கம் "பேடி" என்ற சொல்லாடல்.

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள்" (குறள்-727)

ஆண் தன்மையான வீரமற்ற ஒரு ஆணை பேடி என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

பேடியாடல்,ஆரியப்பேடி என்பன சிலம்பிலும், மணிமேகலையிலும் காணப்படும் பேடி எனும் ஊனத்தின் விளக்கமாகும். பேடி என்பது ஆணும், பெண்ணுமற்ற நிலை. இவர்களை மூன்றாம் பாலினம் எனக் குறிப்பிடுகின்றனர்.

## புறம்கூறும் எச்சம்

ஊன வகையாக,உடல் ஊனம்,அறிவூனம் இரு நிலையில் புலப்படுகின்றன. ஊனமுறல் என்பதில் அஃறிணையும், உயர்திணையும் அமைவதுண்டு. புறநானூற்றில் ஊனத்தின் வகைகள் விளக்கப்பட்டுள்ளன. ஊனம் என்பதை எச்சம் எனும் வார்த்தையால் கூறியுள்ளார், முதுகண்ணன் சாத்தனார்,

"சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்

கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு

எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்" (புறம்-28)

என்ற பாடலடிகள் எச்சத்தின் வகைகள் எட்டு என விளக்கிக் கூறுகின்றன (Swaminatha Iyer, 1984)

மன வளம் குன்றிய சிதடு(சித்தம்), உறுப்புக் குறையுள்ள உடல்,கூன், குள்ளம், ஊமை, செவிடு, விலங்குத் தன்மை, பித்து ஆகிய எட்டும் அச்சம் தரும் பிறவிகள். இவ்வகையான எச்சத்துடன் வாழ்வது நலமில்லாத வாழ்க்கை என்று பாடியுள்ளார்.

"துஞ்சு புலி இடறிய சிதடன் போல"(புறம் -73)

குருடன் என்ற பொருளமைப்பிலும், சிதடன் சொல்லமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

"சிக்கர் சிதடர் சிதலைபோல் வாயுடையார்" (சிறுபஞ்சமூலம் -76)

மனநோயாக, தலைநோய் உடையவரையும் பித்தரையும் சிதடர் என்று குறிப்பிடுகிறது சிறுபஞ்சமூலம்.

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்"(புறம் - 74)

இறந்த நிலையிலுள்ள பிறந்தக் குழந்தை பிண்டம், உறுப்புகள் வளர்ச்சியுற்ற கருவும் பிண்டமாகும். வளர்ச்சியற்ற கருநிலையில் பிறக்கும் குழந்தை உறுப்புக்குறையோடு (ஊனம்) பிறக்கும்.

கருவின் மரபணு நிலை, தாயின் உடல் கூறும், உடல் நிலையும் போன்ற காரணங்களால் குழவியின் மூளையும், தண்டுவடமும் இயல்பாக இல்லாமல் முழு வளர்ச்சி பெறாமல் முடமாக ஊனநிலையில் பிறப்பு அமைகிறது. குழந்தைகள் ஊனமாகப் பிறப்பதற்கு வாயு காரணமாக அமைகிறது.

"பாய்கின்ற வாயுக் குறையியர் குறளாகும்

பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்

பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்" (திருமந்திரம் 480)

என்ற திருமந்திர அடிகள் மனிதர்கள் ஊனமாகப் பிறப்பதற்குரிய காரணத்தை எடுத்துரைகின்றன.

## ஐம்பொறிகள்

ஐம்புலன்கள் (ஐம்பொறி) விளக்கத்தினை பொருளதிகார இயலான மரபியலில்,

“ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே

இரண்டு அறிவதுவே அதனோடு நாவே

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே

ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே

ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே” (தொல். பொருள்571)

தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். ஐம்புலனில் ஏற்படும் குறைபாடு (ஊனம்),மனத்தில் உண்டாகும் குறைபாடு இரண்டும் ஊனத்தினைச் சாரும்.

## ஊமை (பேச்சு குறைபாடு)

மனிதரிடம் காணப்படும் ஆற்றல்களுள் ஒன்று பேச்சாற்றல். பேச்சுத் திறமையில் ஏற்படும் குறைபாட்டினை ஊமை என்கின்றனர். பேச முடியாத நிலையில் குரல்வளையில் ஏற்படும் குறைபாடு. ஒலிப்பின்மை, புரிதலை வெளிப்படுத்த முடியாமை, திறன் இன்மை போன்றவை உண்டாகும் சிக்கலாகும்.

“குரால் ஆன் படு துயர் இராவின் கண்ட

உயர்திணை ஊமன் போலத்” (குறுந் - 224)

இரவில் கிணற்றில் வீழ்ந்த பசுவைப் பார்த்த ஊமன், தன் உயர்குலத்திற்கு ஏற்ற நெஞ்சில் அருளால், தான் வருந்திலன்றிப் பசுவினை கிணற்றிலிருந்து எடுக்க இயலாமல் வருந்தினான். ஒலியின்மையால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியாமல் வருந்தினான்.

## குருடு(பார்வைக்குறைபாடு)

உலகத்தின் இன்பமயத்தைக் கண்டு ரசிக்க விழிகள் வேண்டும். கண்ணின்றி உலகத்தின் இயற்கையை காண்பது இயலாது. ஒளியின்மை பார்வைக் குறைபாட்டைக் குறித்து வந்தது.

“மாரி இரவில் மரம் கவிழ் பொழுதின்

ஆர் அஞர் உற்ற நெஞ்சமொடு,ஓராங்குக்

கண் இல் ஊமன் கடற் பட்டாங்கு” (புறம்-238)

மழை பொழிகின்ற இரவில் மரக்கலம் கவிழும் போது கண்ணிழந்த ஊமையன் கடலில் விழுந்து மாய்ந்ததைப் போல எனக் கையறு நிலைக்கு உவமையாக இரட்டை ஊனநிலை கூறப்பட்டுள்ளது.

“ஒளிறுவாள் மன்னர் ஒன் சுடர் நெடுநகர்

வெளிறு கண் போகப் பல் நாள் திரங்கி” (புறம் - 177)

விளங்கிய வாளையுடைய வேந்தரது ஒண் சுடரினையுடைய உயர்ந்த அரண்மனையில், கண் ஒளி மங்கும்படியானது. அந்த ஒளியின் காரணமாகவும், கண்ணில் நோயும், குறைபாடும் ஏற்படும்.

## செவிடு (காது குறைபாடு)

கேள்வி (கேட்கும் திறன்) காதின்மையில் புலப்படும் குறைபாடு, இவற்றின் மூலம் காதுகேளாமை ஏற்படுகிறது.

"பிறர் மனையின்கட் செவிடராய்" (நாலடி -158)

"கேளாச் செவி" (திருமந்திரம் 588)

இவ்வடிகள் செவிக் குறைபாட்டினைக் குறித்து பாடப்பட்டுள்ளன..

"சொல்லும் மறையில் செவிஇலன்" (ஏலாதி19)

இவ்வடி பிறர் இரகசியங்களைக் கேட்பதில்,செவிடனாய் இருப்பதை உணர்த்துகிறது. தீயச் செயல்களில் செவிடனாய் இருப்பது நல்லது என்பதை உணர்த்தி வருகிறது.

## முடம்

கை முடம், கால் முடம் இரண்டும் குறிப்பிடத்தக்க ஊன வகைகளில் ஒன்று. கையின்மை, செயலிழப்பு, கால் இன்மை, கால்கள் செயலிழத்தல், தளர்ச்சி, நடக்க முடியாமை முடத்தின் அறிகுறியாகும். முடமாவதற்கு நோயும் காரணமாகின்றன. மூளை வாதம், முதுகுத் தண்டின் வளர்ச்சி குறைபாடு என்பது பிறக்கும் போதே குழந்தைகளை முடமாக்குகின்றன. இளம்பருவத்தில் ஏற்படும் இளம்பிள்ளை வாதம், முடவாதம் போன்ற முடத்தன்மைக்கு முக்கியமாகக் கருதப்படுகிறது.

"பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்

உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து" (சிறு 60)

உயர்ந்த மலையிலே, பெரிய தேன்கூட்டை கண்ட கரிய காலை உடைய முடவன் கீழே இருந்தபடி மேலே உள்ள தேன் கூட்டை சுட்டிக் காட்டினான்.

"முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்" (நற்-263)

நாரையானது முடமாக காணப்பட்டதை இளவெயினனார் கூறியுள்ளார்.

ஊனம் உயர்திணைக்கு மட்டுமின்றி அஃறிணைக்கு வரும். மனிதனைப் போல பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உடல் ஊனம் ஏற்படும்.மன ஊனம் (அறிவூனம்) . மனிதனுக்கு மட்டும் ஏற்படும்.

## முதுமையில் ஊனம்

மூப்புப் பருவம் இயல்பாகவே உடலின் செயல்திறனைப் பாதிக்கிறது. முதுமையில் பல ஊனங்கள். உடல் குறைபாடுகள் தோன்றுகின்றன. கிருமிகளின் தாக்கத்தால் நோய் மூலம் ஊனம் ஏற்படுகிறது. போர், விபத்து போன்ற சமூக பாதிப்புகளாலும் ஊனம் ஏற்படுகிறது. முதுமையால் ஏற்படும் ஊனம் இயற்கையானவை. நோய் மூலம் ஏற்படும் ஊனம் இயற்கையாகவோ, கவனக்குறைவாலோ ஏற்படுகின்றன. ஊனமுற்றோர்-வயது முதிர்ந்தோர் என இணைத்துக் காட்டுவது இயல்பு.

"கோல் காலாக குறும் பல ஒதுங்கி

நூல் விரித்தன்ன கதுப்பினன், கண் துயின்று

முன்றில் போகா முதிர்வினால் யாயும்" (புறம்.159)

தாயின் முதுமையைக் கோல் தடியைக் காலமாகக் கொண்டும், நரைத்த மயிரினைக் கொண்டும், கண்பார்வை இல்லாததனால் முன்றிலுக்குக்குக் கூடப் போக முடியாமல் முதுமையின் வாழ்வதனை விளக்குகிறார் பெருஞ்சித்திரனார்.

## தண்டனையில் ஊனம்

பழந்தமிழில் ஒறுப்பு, தண்டம் எனும் சொற்கள் தண்டனையைக் குறித்து வருகின்றன. தனிமனிதனுக்குச், சமுதாயத்திற்கு, அரசுக்கு எதிராகத் தீமையிழைக்கும் குற்றவாளிக்குச் சட்டப்படி அரசு விதிக்கும் இழப்பு தண்டனை.

மெய்ப்பாட்டியலில் வெகுளிச்சுவைப் பற்றிக் கூறும் போது

“உறுப்பறை குடிகோள் அலை கொலை என்றன

வெறுப்ப வந்த வெகுளி நான்கே தோப்பு” (தொல். பொருள் 254)

உறுப்பறை என்பது உறுப்பை அறுத்து எனும் பொருளில் வருகிறது. சினத்திலோ, தண்டனையாகவோ, ஒரு உறுப்பினை அறுத்து ஊனமாக்குவதனைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

“தந்தை

கண்கவின் அழித்த தன்தப்பல் தெறுவர

ஒன்று மொழிக்கோசர் கொன்று முரண் போகிய” (அகம் 96)

ஆவினை வயல்களில் தெரியாமல் மேய விட்டக் குற்றத்திற்காகக் கண்களை அழிக்கும் தண்டனை சங்க காலத்தில் இருந்தது என்பதை அகநானூற்றுப் பாடல் அடிகள் விளக்குகின்றன.

இன்றைய அரசாங்கச் சட்டத் திட்டங்களில் உறுப்பறை எனும் தண்டனை காணப்படவில்லை.

## ஊனமும் தானமும்

ஊனமுற்றோர் பற்றிய சமுதாயச் சிந்தனை பழமையுடையது. ஊன நிலையை ஒரு குறையாகக் கருதாது, ஊனமுற்றவரை ஒதுக்காது, கைவிடாது பாதுகாத்த சமூக அரசியல் நிலையினை இவற்றிலிருந்து உணரமுடிகிறது.

சமூக நலம், சமூக சேவை என்ற நிலையில் ஊனருக்கு உதவுதல் என்ற இன்றைய நிலையில் காணப்படுவது போல பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஊனருக்கு உதவுதல் காணப்பட்டது.

“புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகுயிரார்

கண் கெட்டார் காலிரண்டும் இல்லாதார் - கண் கண் பட்டு

ஆழ்ந்து நெகிழ்ந்தவருக்கு ஈந்தார் கடைபோக

வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து” (சிறு-78)

போரில் காயம் அடைந்தவரிடத்தும், ஆதரவற்றோரிடத்தும், உயிர் போகும் நிலையில் இருப்பவரிடமும், பார்வை மற்றும் இரண்டு கால்கள் இழந்தவரிடத்தும், இரக்கப் பண்புடன் வேண்டிய உதவிகளைச் செய்யும் நல்லவர் நீண்டகாலம் மகிழ்ச்சியுடன் வாழ்வார் என வாழ்த்துகிறது சிறுபஞ்சமூலம்.

நல்வாழ்க்கைக்கு ஈகை அடிப்படை. அதிலும் ஊனமுற்றோருக்கு இரட்டிப்பு பயன்தரக் கூடியவை. இன்றைய நிலையில் சமூக சேவகர்கள், நலத்திட்டங்கள், ஊனமுற்றோர்க்காக அமைக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் என்ற சொல்லை மாற்றி மாற்றுத்திறனாளிகள் என்ற தன்னம்பிக்கையூட்டும் வார்த்தையால் அழைக்கப்படுகின்றனர்.

## உண்மையான ஊனம்

உண்மையான ஊனம் உடல் ஊனம் அன்று. மனதில் ஏற்படும் ஊனமே உண்மையான ஊனமாகும். உடல் உறுப்புகள் செயலற்று இருப்பது குறை ஆகாது அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாது இருப்பதே குறையாகும்.

“பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து

ஆள்வினை இன்மை பழி” (குறள்.618)

என வள்ளுவர் அறிவூனமே ஊனம் என்கிறார். ஊனத்தை உதறித் தள்ளிவிட்டு வாழ்க்கையில் முன்னேறுகின்றவர்கள் வெற்றி அடைகிறார்கள், மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். மனத்தை முதலில் ஊனமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனதில் ஊனமில்லாமல் இருந்தால் உடல் ஊனம் ஓர் ஊனமாகாது.

## முடிவுரை

இலக்கியங்கள் பொதுச் செய்தியாகவும், உவமையாகவும் ஊனம் தொடர்பான கருத்துகளை உரைக்கின்றன. சங்க இலக்கியத்தில் ஊனம் என்ற சொல் அறியப்படவில்லை. பின் வந்த சங்கமருவிய இலக்கியங்களில் ஊனம் எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. புறநானூறு ஊனத்தை எச்சம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது. சமூகத்தில் ஊனமுற்றோரின் நிலையை இலக்கியம் எடுத்தியம்புகிறது. அறிவியல் துறைகளுள் ஒன்றாகச் சமூகவியல் துறை கருதப்படுகிறது. சமூகவியலின் பல துறைகளும் சமூகநலம், சமூகச் சேவை ஆகியவற்றின் இடமும், பங்கும் முக்கியமானவை. இன்றைய சூழலில் ஊனமுற்றோருக்கான சமூக நலத்திட்டங்கள், விழிப்புணர்வுகள் போன்றவற்றை அரசாங்கமும், தன்னார்வ நிறுவனங்களும் செயல்படுத்தி வருகின்றன. மற்றவர்களின் எதிர்காலத்தை ஒளி உடையதாக மாற்றினால் வருங்காலம் ஏற்றமுடையதாக அமையும். ஊனருக்குத் தானமளிப்பதும், உதவி புரிவதும் உயர்வு நிச்சயம். ஊனமுற்றோர் எனச் சொல்லை மாற்றி மாற்றுத்திறனாளிகள் என்று தன்னம்பிக்கையூட்டும் சொல்லால் அழைக்கப்படுகின்றனர். உடல் உறுப்பில் மாற்றம் காணப்பட்டாலும் அவர்கள் சாதிக்கும் திறன் படைத்தவர்கள். இயல்பான மனிதனுக்குரிய உடல், ஊன, அறிவுத் தன்மையிலும், செயல் திறனிலும், எந்நிலையிலும் உண்டாகும் குறைபாடு ஊனம் எனச் சுட்டப்படுகிறது. ஊன வகைகள் உடலூனம்,அறிவூனம் என்று இரு வகைகளில் அறியப்படுகிறது. உடலூனமானது உறுப்பூனம், பால் ஊனம், பிறவியூனம், ஊனம் செய்தல், விபத்தில் விளையக்கூடிய ஊனம் எனப் பல வகைகளில் காணப்படுகிறன. புறநானூறு எச்சத்தினை எட்டாக வகுக்கிறது. அதில், குறிப்பிடப்படாத பல எச்ச வகைகளும் உள்ளன. உயர்திணையான மனிதருக்கு மட்டுமின்றி அஃறிணையான பறவைகளும், விலங்குகளுக்கும் ஊனம் உண்டாகும். பழங்காலத்தில் அரச விதிகளில் உறுப்பறை என்ற தண்டனையும் அதன் மூலம் மனிதர்க்கு ஊனமும் உண்டாக்கப்பட்டது. இன்றைய நிலையில் இவ்வகையான தண்டனைகள் வழங்கப்படவில்லை. ஊனம் பற்றிச் சமுதாயம் சிந்தித்துச் செயல்படுகிறது. சமூகத்தின் படைப்பான இலக்கியமும், ஊனம் பற்றியத் தகவல்களையும், தரவுகளையும் எக்காலத்திலும் பதிவு செய்து கொண்டு இருக்கிறது. இலக்கிய வருகைகள் பலவும் இத்துறை பற்றிய உண்மைகளை வழங்க வல்லனவாய்த் திகழ்கின்றன.

## References


Anne Thomas, (2004) Samukathilum Ilakiyathilum Unamutor, International Institute of Tamil Studies, Chennai, India

Puliyur Kesigan, (2010) Avvaiyar Thanipadalkal, Mankai Veliyedu, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1984) Purananooru Moolamum Uraiyum, U Ve Sa Noolaga nilayam, Chennai – 600090, Tamil Nadu, India.

Thirunanasambantham, S (2013) Tholkapiyam Sollathikaram Moolamum Uraiyum, Kathir Pathippagam, Thiruvaiyaru, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License